பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 05 2026 SATURDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. அரியவகை கனிமவள உற்பத்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. விவசாயக் கடன்களை வரம்புகள் ஏதுமின்றி முழுமையாக தள்ளுபடி செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

3. அஇஅதிமுக-வின் நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா விவகாரத்தில் குதிரைபேரம் நடந்துள்ளதாகவும், இதுகுறித்து ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

4. நீலகிரி, கோவை, சேலம் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<>>>>>

லித்தியம் பேட்டரி மற்றும் நிலையான மின்காந்த சக்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாக மின்னணு தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டா அருகே சூரஜ்பூரில் அரியவகை கனிமவள உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்நாட்டிலேயே இந்த தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

**Lohum** என்ற புத்தாக்க தொழில் முயற்சியின் மூலம் கனிம வள உற்பத்தித்துறையில் இளைஞர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்களை வரம்புகள் ஏதுமின்றி முழுமையாக தள்ளுபடி செய்வது குறித்து மாநில அரசு பரிசீலித்து வருவதாக நிதியமைச்சர் திரு மரியவில்சன் தெரிவித்துள்ளார்.

நாகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயக் கடன் தள்ளுபடியில் இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

மகளிருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் உரிமைத் தொகை குறித்த அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை இரண்டு வாரத்தில் வெளியிடப்படும் என்றும் திரு மரியவில்சன் கூறினார்.

<<<<<>>>>>

மேகதாது அணை விவகாரம் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையத்தை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வேளாண் பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தில் உள்ள குறைபாடுகள் குறித்த விவசாயிகளின் கோரிக்கைகள் முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவை பரிசீலிக்கப்பட்டு அது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்று அவர் கூறினார்.

கும்பகோணம் நகருக்கு நாளொன்றுக்கு **20** மில்லியன் லிட்டர் குடிநீர் தேவைப்படும் நிலையில், தற்போது **16** முதல் **17** மில்லியன் லிட்டம் வரை மட்டுமே குடிநீர் கிடைப்பதாக அவர் கூறினார்.

இந்த பற்றாக்குறையை விரைவில் சரிசெய்து தேவையான அளவு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தெரிவித்தார்.

தில்லியில் அண்மையில் நடைபெற்ற வேளாண்துறை அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்றது பயனுள்ளதாக அமைந்ததாக கூறிய திரு வினோத், விதை நெல், உரம், யூரியா மற்றும் விவசாயத் துறைக்கான நிதி ஒதுக்கீடு குறித்து மத்திய அரசு ஆலோசனை நடத்தியதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

அரசு கல்லூரி மாணவர், மாணவியர் விடுதிகளில் தரமற்ற உணவு வழங்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னி அரசு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கோவை மாவட்டத்தில் உள்ள சமூக நீதி மற்றும் பழங்குடியினர் நல மாணவியர் விடுதியில் ஆய்வு மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உணவின் தரம் குறித்து மாணவியரிடமிருந்து வந்துள்ள புகாரின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

மாணவியர் விடுதியிலிருந்து கல்லூரிக்கு செல்ல பேருந்து வசதி ஏற்படுத்தித் தர வேண்டும், அவர்கள் பயன்படுத்தும் சாலையில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு வன்னி அரசு கூறினார்.

<<<<<>>>>>

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறையின் அடுத்தக்கட்ட வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மதன் ராஜா தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் இன்று நடைபெற்ற மாவட்ட அளவிலான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், தொழில் நிறுவனங்களின் தற்போதைய நிலை, தொழில் முனைவோர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அரசின் திட்டங்கள் குறித்து கேட்டறிந்ததாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

மாணவர்களின் தனித்திறமையை கண்டறிந்து, அவற்றை வெளிக் கொண்டுவருவதற்கான முயற்சியை மாநில அரசு மேற்கொள்ளும் என்று அமைச்சர் திருமதி கமலி தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் அரசு பள்ளி மாணவர்களுக்கான கோடைகால சிறப்பு முகாமில் கலந்துகொண்டு பேசிய அவர், கல்வியுடன் ஒழுக்கமும்

இணைந்தால் மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெறுவது நிச்சயம் என்று குறிப்பிட்டார்.

இலக்கை நோக்கிய பயணத்தை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திருமதி கமலி கூறினார்.

<<<<<>>>>>

அஇஅதிமுக-வின் நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா விவகாரத்தில் குதிரைபேரம் நடந்துள்ளதாகவும், இதுகுறித்து ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அக்கட்சி, ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகரிடம் புகார் மனு அளித்துள்ளது.

அஇஅதிமுக சட்டமன்ற கொறடா திரு அக்ரி கிருஷ்ணமூர்த்தி மற்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு எம் தனபால் ஆகியோர் சென்னையில் உள்ள மக்கள் மாளிகையில், ஆளுநரை சந்தித்து அளித்த மனுவில், திருமதி மரகதம் குமரவேல், திரு ஜெயக்குமார், திருமதி பி.சத்தியபாமா, திரு எசக்கி சுப்பையா ஆகியோர் ராஜினாமா கடிதங்களை சட்டப்பேரவைத் தலைவரிடம் அளித்த உடனேயே அவர்கள் தவெக-வில் இணைந்ததாக கூறப்பட்டுள்ளது.

ஜனநாயக மற்றும் அரசியல் சாசன நடைமுறைகளை பாதுகாக்கும் வகையில் இப்பிரச்சினை தொடர்பாக ஆளுநர் உடனடியாக நடவடிக்கை

எடுத்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு அக்ரி கிருஷ்ணமூர்த்தி, தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பில் கொறடா உத்தரவை மீறி அரசுக்கு ஆதரவாக இந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களும் வாக்களித்ததாக ஆளுநரிடம் அளிக்கப்பட்ட புகாரில் கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

சட்டமன்ற செயலகம், தவெக-வின் கட்சி அலுவலகமாக மாறி வருவதாகவும், இதனை தடுக்க ஆளுநர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாங்கள் வலியுறுத்தி இருப்பதாகவும் திரு அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள முருகப்பெருமான் ஆலயங்களில் வைகாசி விசாக திருவிழா இன்று கொண்டாடப்பட்டது.

மதுரை திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோவில், சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோவில் உள்ளிட்ட பல்வேறு கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் வைகாசி விசாக திருவிழாவையொட்டி விஸ்வரூப தரிசனம் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte — லஷ்மணன் — 49 Sec. )*

<<<<<>>>>>

நீலகிரி, கோவை, சேலம் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் வரும் ஐந்து நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — வி ஆர் துரை — 43 Sec. )*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை திருவான்மியூர் பகுதியில் உலக புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு பிரம்ம குமாரிகள் மருத்துவத்துறை சார்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

--------------

மாதவரம் ஏரி படகு குழாம் பகுதியில் சுமார் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாட்டுப் பணிகளை சென்னை மாநகராட்சி ஆணையர் திரு சமீரன் இன்று ஆய்வு செய்தார்.

-----------

திருவாரூர் மாவட்டம் வடுவூர் கோதண்டராமர் கோவில் வைகாசி விசாகத்தை முன்னிட்டு கருடசேவை நடைபெற்றது

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 21-19, 21-18 என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் Won Ho Kim — Seung Jae Seo இணையை வென்றது.

----------

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான இரண்டாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

Bristol-ல் இப்போட்டி, இன்றிரவு 7 மணிக்குத் தொடங்குகிறது.

<<<<<>>>>>